DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.41/17

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name மணி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அல்லிநகரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்துவருகிறேன். 29.10.16 அன்று எனது தம்பியும், அர்ஜீன் என்பவரும் இருசக்கரவாகனத்தில் அல்லிநகரத்திலிருந்து அன்னஞ்சி விலக்கிற்கு சென்றார்கள். ஈஸ்வரன் கோவில் அருகே சென்றுக்கொண்டிருந்த போது எனது தம்பி வடக்குநோக்கி சென்றுக்கொண்டிருந்த போது பெரியகுளத்திலிருந்து தேனி நோக்கி வந்த சி.கே.சொக்கன் என்ற தனியார் பேருந்து அதிகவேகமாக வந்து எனது தம்பி ஓட்டி சென்ற இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக அருகில் இருந்தவர்கள் தொலைபேசி மூலம் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். எனது தம்பியை 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்குகொண்டு சேர்த்துவிட்டார்கள். உடன் சென்ற அர்ஜீனனை ஆட்டோ மூலம் அவரது தாயார் மருத்துவமனை அழைத்து சென்றார். சம்பவ இடத்திலேயே எனது தம்பி இறந்துவிட்டார். விபத்து சம்மந்தமாக அர்ஜீன் புகார் அளித்திருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தின் போது வண்டி வேகமாக வந்ததையும் என் தம்பி மீது இடித்ததையும் நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அங்கிருந்தவர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஈஸ்வரன் கோவில் அதிகமான மக்கள் சாமிகும்பிடும் முக்கியமான கோவில் என்றால் சரிதான். மேற்படி கோவிலுக்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் சுமார் 50 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். செல்போன் மூலம் எனக்கு தகவல் சொன்ன நபர் எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். அல்லிநகரத்தை சேர்ந்த விக்னேஷ் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். இரவு 10 மணிக்கு நான் சென்று பார்த்தேன். நான் சென்று பார்க்கும் போது பொதுமக்கள் கூட்டமும், போலிசாரும் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். ஈஸ்வரன் கோவிலுக்கு அருகே ரோட்டில் பேரிகார்டு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தில் செண்டர் மீடியேசன் இருக்கிறது என்றால் சரிதான். நான் பார்க்கும் போது எனது தம்பி ரோட்டின் செண்டர் மீடியேசனுக்கு கிழக்குபுறமாக எனது தம்பி கிடந்தான் என்றால் சரிதான். எனது தம்பிகிடந்த இடத்தில் இரத்தகறை இருந்தது என்றால் சரிதான். என் தம்பி ஒட்டி சென்ற இருசக்கரவாகனமும் அந்த இடத்தில் சிதைந்து கிடந்தது என்றால் சரிதான். சம்பவ நடந்த தினம் தீபாவளி பண்டிகை தினம் என்றால் சரிதான். எனது தம்பிக்கு அந்த சமயத்தில் இருசக்கரஓட்டுனர் உரிமம் இல்லை. என் தம்பியுடன் சென்ற அர்ஜீனுக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது. என் தம்பி ஓட்டி சென்ற இருசக்கரவாகனம் அவனுக்கு சொந்தமானது இல்லை என்றால் சரிதான். என் தம்பி பெயிண்டராக வேலை பார்த்துவந்தார். என் தம்பிக்கு மது அருந்தும் பழக்கம் இருந்தது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. தவறான தகவலின் அடிப்படையில் முதல் விசாரணையில் கண்ட சங்கதிகளை கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி வேகமாக வரவில்லை என்றும் அது தவறான தகவல் என்றால் சரியல்ல. எனது தம்பி இருசக்கரவாகனத்தை ரோட்டின் மேற்குபுறத்திலிருந்து கிழக்கு

புறமாக திடீரென ரோட்டின் குறுக்காக கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது தம்பி மது அருந்திவிட்டு நிலை தெரியாமல் இருசக்கரவாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.